# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 02, 2023 Weekly E-paper • September 02, 2023



## ஒரே நாடு ஒரே செங்கல்

சுப. வீரபாண்டியன்

### ‘பாஜக’ ஆட்சி மறையட்டும்! ‘இண்டியா’ கூட்டணி உதிக்கட்டும்!!

பொள்ளாச்சி மா. உமாபதி

### மோடியின் சிலிண்டர் வித்தை...!

தலையங்கம்

### ‘விஸ்வகர்மா யோஜனா’ அப்பட்டமான குலத்தொழில் திட்டம்!

இரா.விஜயலட்சுமி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2054 • செப்டம்பர் 02, 2023

Weekly E-paper • September 02, 2023


# ஒரே நாடு ஒரே செங்கல்

**சுப. வீரபாண்டியன்**

முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில், திடீரென்று இந்திய ஒன்றிய அரசு, ஒரு குழுவை நியமித்திருக்கிறது. ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திற்கும், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலச் சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்துவது குறித்து ஆராய்வதற்காக அந்தக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது.

ஏற்கனவே காங்கிரஸ் ஆட்சியிலேயே, இந்த நோக்கத்திற்காக சுதர்சன நாச்சியப்பன், எம்.பி. தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவும், அடுத்தடுத்து அமைக்கப்பட்ட வேறு இரண்டு குழுக்களும், நடைமுறையில் இப்படி ஒரே நேரத்தில் நாடு முழுவதும் தேர்தல் நடத்துவதற்கு வாய்ப்பு இல்லை என்று கூறிவிட்டன. சட்ட ஆணையமும் அதற்கான சாத்தியத்தை மறுத்துவிட்டது. ஆனால் மறுபடியும் அதே வேலையில் இப்போது பாஜக அரசு இறங்கியுள்ளது.

இதற்காகவே அவசர அவசரமாக, வரும் 18ஆம் தேதி நாடாளுமன்றம் கூட்டப்பட இருக்கிறது என்னும் செய்தி அல்லது வதந்தி நாடு முழுவதும் பரவிக் கொண்டிருக்கிறது. பொதுமைக் குடிச்சட்டம் (uniform civil code) என்பதை கொண்டு வரப்போகிறார்கள் என்றும், வரும் டிசம்பர் மாதமே தேர்தல் வந்துவிடக் கூடும் என்றும் பல்வேறு செய்திகள் உலாவுகின்றன.

ஏன் இந்தத் திடீர் அறிவிப்பு? மும்பையில் நேற்றும் இன்றும் நடைபெற்ற இந்தியா கூட்டணியை கண்டு மிரண்டு போயிருக்கும் பாஜக, இப்படி ஒரு திசை திருப்பும் வேலையைத் தொடங்கியிருக்கலாம்!

ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது குறித்து, இரண்டு கோணங்களில் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. இது நடைமுறையில் சாத்தியப்படுமா என்பது ஒன்று. இதனால் என்ன பயன் ஏற்படப்போகிறது என்பது இரண்டாவது!

நடைமுறையில் இதற்கான வாய்ப்புகள் மிகமிகக் குறைவு என்பதைத்தான் முந்தைய குழுக்கள் தெரிவித்தன. இப்படித் தேர்தலை நடத்த வேண்டும் என்றால், அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும். அதற்குத் தனிப் பெரும்பான்மை போதுமானதில்லை. நாடாளுமன்றம், மாநிலங்களவை இரண்டிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிடைத்தால்தான் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வர முடியும். இன்றைக்கு இருக்கும் ஆளும் கட்சிக்கு, மாநிலங்களவையில் அப்படி ஒரு மிகப்பெரிய பெரும்பான்மை இல்லை என்பது வெளிப்படையான உண்மை.

அதுமட்டுமின்றி, தேர்தலை ஒரே நேரத்தில் நடத்துவதற்குப் போதுமான வாக்குப் பதிவு இயந்திரங்கள் (EVM) அத்தனை எண்ணிக்கையில் இல்லவே இல்லை!

இவை இரண்டையும் நிறைவு செய்து விட்டாலும், இன்னும் பல கேள்விகள் மிச்சப்படுகின்றன. தேர்தல் முடிவுகள் வரும் வேளையில், நாடாளுமன்றத்திற்கோ, சில சட்டமன்றங்களுக்கோ போதுமான பெரும்பான்மை இன்றி அமைந்துவிட்டால், அந்தத் தொங்கு பாராளுமன்றங்களை என்ன செய்வது? இடையில் ஒரு ஆட்சி கவிழ்ந்து போய் விடுமானால், அப்போது என்ன செய்வது? இந்த இரண்டு தருணங்களிலும் நாடு முழுவதும் மறுபடியும் தேர்தல்களை நடத்திக் கொண்டிருப்பதா?

இது குறித்து எல்லாம், எந்தக் கவலையும் இல்லாமல், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பதில் என்ன பொருள் இருக்கிறது? இது ஒற்றை முழக்கம் அன்று! இதன் தொடர்ச்சி, ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே பண்பாடு என்று நீளும்! எய்ம்ஸ் மருத்துவமனை என்றால் கூட ஒரே செங்கல் என்பது தானே, அவர்களின் இயல்பாக இருக்கிறது! ●



# ‘பாஜக’ ஆட்சி மறையட்டும்! ‘இண்டியா’ கூட்டணி உதிக்கட்டும்!!

**பொள்ளாச்சி மா. உமாபதி**

2019 ஆம் ஆண்டு தேர்தலில், ‘வானத்தை வளைப்பேன்! வைகுண்டத்தைக் காட்டுவேன்! மணலைக் கயிறாய்த் திரிப்பேன்! மக்களுக்கு சொர்க்கத்தைக் காட்டுவேன் ‘ என்றெல்லாம் மக்களை நம்ப வைத்து ஏமாற்றி ஆட்சியைப் பிடித்த கட்சி, பாஜக.

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஸ்விஸ் வங்கியில் பதுக்கப்பட்டு இருக்கும் இந்திய கருப்புப் பணத்தை மீட்டு “இந்திய மக்கள் ஒவ்வொருவரின் வங்கிக் கணக்கிலும் 15 லட்சம் ரூபாய் போடுவோம் !” என்று மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது, பா.ஜ.க கட்சி!

திடீரென்று ஒருநாள் ஐநூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று கூறி மக்களை நடுத்தெருவில் நிற்க வைத்து, அவர்களில் பலரை மன உளைச்சலாலும் , வெயில் தாக்கத்தாலும் மடியச் செய்த ஆட்சி, பா.ஜ.க ஆட்சி!



ஏழை மாணவர்கள் கல்விக்காகக் வங்கியில் கடன் பெற்றுப் படித்து முடித்து, வேலைக்குப் போய் முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு முன், வங்கி அதிகாரிகளால் அந்த ஏழை மாணவர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள். ஆனால் பல்லாயிரம் கோடிகளை வங்கியில் கடனாக வாங்கி, பட்டை நாமம் போட்டு வெளிநாடுகளுக்குத் தப்பியோடும் மல்லையாக்களுக்கும், லலித் மோடிகளுக்கும், நீரவ் மோடிகளுக்கும் அவர்களின் கடன்களைத் தள்ளுபடி செய்யும் நேர்மையற்ற ஆட்சி செய்யும் கட்சி, பா.ஜ.க ஆட்சி!

ராமர் படத்தையும், அயோத்தி கோயிலையும் காட்டிக் காட்டி, மக்களிடம் மத உணர்வுகளைத் தூண்டி கோரத்தாண்டவம் ஆடும் பாசிசத்தின் ஆட்சியே பா.ஜ.க ஆட்சி!

காஷ்மீர் மக்களின் உரிமைகளைப் பறித்து, அதன் மாநிலத் தகுதியைப் பறித்து, அதை மூன்றாகப் பிரித்து அநீதி இழைத்த நாசிச ஆட்சி, பா.ஜ.க ஆட்சி!

சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் குடியுரிமைச் சட்டத்தைக் கொண்டு வந்து, இந்துத்துவச் சாயலில் இந்திய ஒன்றிய குடிமக்களின் குடி உரிமையைக் கேள்விக் குறியாக்கி, சிக்கலை ஏற்படுத்திய மதவாத, எதேச்சதிகார ஆட்சி பா.ஜ.க வின் ஆட்சி!

விவசாயிகளுக்கு எதிரான வேளாண் சட்டங்களை இயற்றி லட்சோப லட்சம் விவசாயிகளைத் தலைநகரில், தில்லி புறநகர் பகுதியில் ஆண்டுக் கணக்கில் போராட வைத்து பல நூறு உயிர்களைப் பறித்த ஆட்சி, பா.ஜ.க.வின் ஆட்சி!

அந்தந்த மாநிலங்களில் மாணவர்களுக்குக் கிடைத்து வந்த மருத்துவக் கல்வியை, ‘நீட்’ எனும் தேர்வைக் கொண்டு, பாமர ஏழை, கிராமப்புற மக்களின் மருத்துவக் கல்விக் கனவுகளைத் தகர்த்தது, கொடுமையான பா.ஜ.க வின் ஆட்சி!

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தங்கள் ‘ஏஜெண்டு’ ஆளுநர்கள் மூலம் தொல்லைகள் கொடுத்து, மாநில உரிமைகளைப் பறிக்கும் ஆட்சி, பா.ஜ.க ஆட்சி!

எதிர்க்கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் வீடுகளில் அமுலாக்கத் துறையை ஏவி ‘சொத்துக் குவிப்பு’ என்று சோதனையிடுவதும், முறையற்ற கைது நடவடிக்கைகளும், பிணை மறுப்பும், சிறைவாச நீடிப்பும் என்று மிரட்டும் ஆதிக்க ஆட்சி, பா.ஜ.க ஆட்சி!

போதிய வாக்கு வங்கி இல்லாத மணிப்பூர் மக்களின் குக்கி இனப்பெண்கள், நிர்வாணப் படுத்தப்பட்டு, வல்லுறவுகளுக்கு ஆளாக்கப்பட்டுத் தெருக்களில் இழுத்து வந்தாலும் அந்த அவலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் வேடிக்கை பார்க்கும் ஆட்சி, பா.ஜ.க வின் நரேந்திர மோடி ஆட்சி!

கொடுங்கோல் ஆட்சி நடத்தி வரும் பாசிச, மதவாத, சனாதன பாஜக அரசை வீழ்த்துவதற்குக் காஷ்மீரத்தின் பரூக் அப்துல்லா கட்சி, பஞ்சாப், டெல்லி மாநிலங்களை ஆளும் அரவிந்த் கெஜ்ரிவாலின் ஆம்ஆத்மி கட்சி, ஹரியானா, இமாச்சலப் பிரதேச விவசாயப் பெருங்குடிகளின் கட்சிகள், உத்திரப்பிரதேசத்தின் அகிலேஷ் யாதவின் சமாஜ்வாடி கட்சி, பீகாரில் லாலு பிரசாத்தின் ராஷ்ட்ரீய ஜனதா கட்சி - நிதீஷ் குமாரின் ஐக்கிய ஜனதா தளம், மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியின் திருணாமுல் காங்கிரஸ் - இந்திய தேசிய காங்கிரஸ் - இடதுசாரிக் கட்சிகள், மராட்டியத்தில் சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் - உத்தவ் தாக்கரேவின் சிவசேனா கட்சி என வட மாநில அரசியல் கட்சிகளும், தமிழ்நாட்டில் அசைக்க முடியாத திமுக, கர்நாடகத்தில் காங்கிரஸ் கட்சி, கேரளத்தில் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி - எதிர்க்கட்சியாக உள்ள காங்கிரஸ் கட்சிகள் எல்லாம் ஒருங்கிணைந்து I.N.D.I.A. என்னும் கூட்டணியை உருவாக்கியுள்ளனர்.

கண்களுக்கு எதிரே பொதுத் தேர்தல். கைகளிலே வாக்குச் சீட்டு. ஜனநாயகத்தை மீட்க, நாட்டைக் காப்பாற்ற, பா.ஜ.கவைத் தோற்கடிப்போம்.

வாருங்கள் நாட்டினரே ‘இந்தியா’ கூட்டணிக்கு வாக்களிப்போம், 2024 பொதுத் தேர்தலில்.!

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## மோடியின் சிலிண்டர் வித்தை...!

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் 108 டாலருக்கு விற்ற போது அன்றைய இந்திய ஒன்றியப் பிரதமர் மன்மோகன் சிங் அரசு, ஒரு சமையல் எரிவாயு சிலிண்டரை ரூபாய் 400 விலையில் மக்களுக்குக் கொடுத்தது.

இன்று உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் 60 டாலருக்கு விற்கப்படும் நிலையில், இன்றைய பா.ஜ.க வின் மோடி அரசு ஒரு சிலிண்டரை ரூபாய் 200 என்று கொடுக்கலாம். ஆனால் ரூபாய் 1200 என்று கூடுதல் விலையில் மக்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது திடீரென்று 200 ரூபாய் குறைத்து விட்டோம் என்று தொலைக்காட்சியில் தோன்றி புளகாங்கிதம் அடைகிறார் அவர். இது பெண்களுக்கு அளிக்கப்படும் பரிசாம்..? அப்படியானால் 400 ரூபாயில் இருந்த சிலிண்டரின் விலையை 1200 வரை ஏற்றிக் கொண்டு வந்தாரே மோடி, அது எல்லாம் பெண்களுக்கு அவர் அளித்த தண்டனை என்று தானே பொருள்?

மோடியின் இந்தத் திடீர் அறிவிப்புக்குப் பின்னால் ஒரு பலமான காரணம் இருக்கிறது.

மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா, மிசோரம் மாநில சட்டமன்றங்களுக்கு நவம்பர், டிசம்பரில் தேர்தல் நடக்க உள்ளது. அதைத் தொடர்ந்து பொதுத் தேர்தல் வருகிறது. இந்நிலையில் 'இந்தியா' எதிர்க்கட்சிகளின் கூட்டணி வலுப்பெற்றும் வருகிறது.

"இரண்டு கூட்டம் நடந்தது, 200 ரூபாய் குறைந்து விட்டது" இது மம்தா பானர்ஜியின் ஏளனம்.

"சிலிண்டர் விலை குறைப்பு தேர்தல் விரைந்து வருவதைக் காட்டுகிறது" சொல்கிறார் ப.சிதம்பரம்.

" பா.ஜ.க வின் தந்திர வித்தை எல்லாம் மக்களிடம் பலிக்காது" என்கிறார் மல்லிகார்ஜுன கார்கே.

அதாவது பா.ஜ.கவுக்குத் தேர்தல் பயம் பிடித்து ஆட்டுகிறது என்பது வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது.

கடந்த தேர்தல்களின் போதும் இப்படித்தான் விலைக் குறைப்பு நாடகமாடி, தேர்தல் முடிந்தவுடன் விலையை ஏற்றிக் கொண்டே வந்தது மோடி அரசு.

இப்போதும் அதே நாடகம்!

எப்போதும் ஏமாற மாட்டார்கள் மக்கள்!

●

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## பொதுச் செயலாளர் சுற்றுப் பயணம்



02-09-2023 மாலை, சென்னை – கலைஞர் நூற்றாண்டு விழா

03-09-2023 காலை, மதுரவாயல் – சுயமரியாதைத் திருமணம்,
மாலை, சென்னை – கவிக்கோ அரங்கம் நூல் வெளியீட்டுவிழா

05-09-2023 காலை, வடசென்னை சங்கரலிங்கனார் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் தினவிழா
மாலை – சென்னை மாநிலக் கல்லூரி ஆசிரியர் தின விழா

06-09-2023 மாலை, சென்னை – ஆர்ப்பாட்டம்

09-09-2023 மாலை, சென்னை பெரவள்ளூர் – திமுக பொதுக்கூட்டம்

10-09-2023 காலை, நெய்வேலி – திருமண விழா

11-09-2023 மாலை, சென்னை – திமுக பொதுக்கூட்டம்,

**- எட்வின்**
தலைமை நிலையச் செயலாளர்

# ‘விஸ்வகர்மா யோஜனா’ அப்பட்டமான குலத்தொழில் திட்டம்!

**இரா.விஜயலட்சுமி**

2024 ஆம் ஆண்டு ஒன்றியத்தின் பொதுத் தேர்தல் சில மாதங்களில் வரவிருக்கும் நிலையில் கூட, சனாதனத்தைத் திணிக்கும் வேலையை ‘விஸ்வகர்மா யோஜனா’ என்ற பெயரில் அறிவித்திருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

“குரு-சிஷ்ய பரம்பரை அல்லது குடும்ப அடிப்படையிலான பாரம்பரியத் திறன்களை, கைவினைஞர்கள் மற்றும் கைவினைக் கலைஞர்கள் தங்கள் கைகள் மற்றும் கருவிகளுடன் பணிபுரியும் திறன்களை வலுப்படுத்தி வளர்ப்பதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது” என்று இதற்கு ஒரு விளக்கமும் தரப்பட்டுள்ளது.

அதாவது பரம்பரை, பரம்பரை என்ற அடிப்படையில், பாரம்பரியக் கைவினைத் தொழிலை வலுப்படுத்தி வளர்ப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாம்.

இந்தத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சரி, யார் யாருக்கு எல்லாம் இந்த ‘யோஜனா?’

(1) தச்சு வேலை செய்பவர், (2) படகு தயாரிப்பவர், (3) பூட்டு தயாரிப்பவர், (4) சுத்தியல் உள்ளிட்ட கருவிகள் தயாரிப்பவர், (5) இரும்புக் கொல்லர், (6) பொற்கொல்லர், (7) மண்பாண்ட வேலை செய்பவர், (8) சிற்ப வேலை செய்யும் சிற்பி, (9) கல் உடைப்பவர், (10) செருப்பு (காலணி) தைப்பவர், (11) கொத்தனார் வேலை செய்பவர், (12) கூடை - பாய் - துடைப்பம் - தேங்காய் நார் மூலம் கால்மிதியடி தயாரிப்போர், (13) பொம்மை செய்பவர், (14) முடிதிருத்துவோர், (15)பூ மாலை தயாரிப்பவர், ( 16) சலவைத் தொழில் செய்பவர், (17) தையல் தைப்பவர், (18) மீன்பிடி வலை தயாரிப்பவர் ஆகிய பதினெட்டு வகையான தொழில் செய்யும் ‘சமூக’த்தவர்களுக்கு இந்த விஸ்வகர்மா திட்டம் ஊக்கப்படுத்தி, உதவி செய்யுமாம்.

நான்கு வருணங்கள் அடிப்படையில் அந்தந்த வருணத்தவர்கள், அவரவர்க்கு ஒதுக்கப்பட்ட வேலையைச் செய்ய வேண்டும் என்ற


படம்: நன்றி, விகடன்

மநுஸ்மிருதி, பகவத் கீதை வழியில் அப்பட்டமான ‘குலத்தொழில்’ திட்டம் தான் இந்த விஸ்வகர்மா யோஜனா என்பது தெளிவாகத் தெரிகிறது.

1953 ஏப்ரல் மாதத்தில் ராஜாஜியால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘குலக்கல்வி’ திட்டத்தைத் தந்தை பெரியார் கடுமையாக எதிர்த்தார். இத்திட்டத்திற்கு எழுந்த கடும் எதிர்ப்பால் குலக்கல்வித் திட்டம் திரும்பப் பெறப்பட்டது.

அன்று கல்வியில் கைவைத்துச் சுட்டுக் கொண்ட சங்கிகள், இன்று தொழில் என்று குலப்பிரிவுகளைத் தூக்கிக் கொண்டு வருகிறார்கள்.

இதைக் கட்சிகளுக்கு அப்பாற்பட்டு, அனைத்து மக்களும் ஓரணியில் நின்று எதிர்க்க வேண்டும். எதிர்வரும் 6ஆம் தேதி சென்னையில் திராவிடர் கழகம் முன்னெடுக்கும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை வலுப்பெறச் செய்வோம்.

2024 தேர்தலில்மோடி ஆட்சியைத் தூக்கி எறிவோம்! •

# என்ன செய்யப் போகிறார், ஆளுநர்?

எப்போதும் தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசுடன் முட்டிக்கொண்டு இருப்பவர் ஆளுநர் ஆர்.என்.ரவி.

தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது என்று தெரிந்தும் கூட; மதவாத, சனாதன விதைகளை விதைக்க முயலும் வேண்டாத வேலையைச் செய்து கொண்டு இருப்பார் அவர். ஆனால் செய்ய வேண்டிய வேலையை மட்டும் செய்யமாட்டார்.

இன்று பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவர்களை அவருக்கு எதிராகவே போராடும் அளவுக்கு நிலைமையை உருவாக்கி விட்டார்.

அந்தப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு வழங்க வேண்டிய



பட்டங்களை வழங்காமலும், அதற்குரிய தேதியைச் சொல்லாமலும், அதைப் பற்றிக் கவலை இல்லாமலும் இழுத்தடிக்கிறார் என்று ஆளுநருக்கு எதிராக மாணவர்கள் குமுறுகிறார்கள்.

பட்டங்கள் கிடைத்தால் தான் வெளிநாடுகளில் வேலை தேடவும், இங்கே தனியார் நிறுவனங்கள் உள்பட வேலைக்குப் போகவும் முடியும் என்று சொல்லும் மாணவர்கள், இனியும் பட்டம் வழங்கக் காலம் தாழ்த்தி, இழுத்தடித்தால் பெரிய அளவில் போராடப் போவதாகக் கூறுகிறார்கள்.

என்ன செய்யப் போகிறார் ஆளுநர் ?

**- எழில்**

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian